# 22.BLOOD RELATIONSHIP PROBLEMS

1. தீபக்கின் சகோதரர் விமல். விமல் என்பவர் பிரேமின் மகன் ஆவார்.ராஜா என்பவர் பிரேமின் தந்தை ஆவார். விமல் என்பவர் ராஜாவிற்கு எவ்வகையில் உறவு ?

1) மகன் 2) பேரன்
3) சகோதரன் 4) தாத்தா

2.நபர் B-ன் சகோதரர் A.மேலும்A-ன் தந்தையின் சகோதரி C.எனில், C என்பவர் B-க்கு எவ்வகையில் உறவு?

1) பாட்டி
2) தாய்
3) அத்தை
4) உடன் பிறவா சகோதரி

3. M-ன் மகன் Q,N-ஐ மணந்தார்.N-ன் தங்கைO, P-ஐ மணந்தார். P என்பவர் Q-வின் சகோதரர்.O-விற்கும் M-ற்கும் உள்ள உறவு என்ன?

1) சகோதரி 2) மருமகள்
3) பேத்தி 4) மகள்

4. A-என்பவர் B மற்றும் C-யின் மகள்,D என்பவர் A-ன் சகோதரி.A யின் அத்தை E. எனில், E-ன் சகோதரி.

1) D 2) B
3) C 4) போதுமான தகவல் இல்லை

5. A-என்பவர் B-ன் சகோதரி. B என்பவர் C-ன் சகோதரி . C என்பவர் D-ன் மகன்.D என்பவர் A என்பவருக்கு என்ன உறவு?

1) மகன் 2) மகள்
3) மாமா 4) தாய்

6.பாலா என்பவர் ராணியைக் குறித்து கூறும்போது "அவளுடைய தாயின் ஒரே

மகள் எனக்கு தாய் ஆவார்'' எனக் கூறினார். எனில், பாலா ராணிக்கு என்ன உறவு?

1) சகோதரன்
2) மகன்
3) மருமகன்
4) உடன் பிறவா சகோதரன்

7. ஒரு நபரைப் பார்த்து ராமன்,"அவன் என்னுடைய தாயின் தாய்மாமனின் மகன்",எனக் கூறினான்.எனில்,ராமனுக்கு அவர் என்ன உறவு?

1) சகோதரன்
2) சித்தப்பா/பெரியப்பா
3) உடன் பிறவா சகோதரன்
4) தாய்மாமன்

8. ஒரு நபரைப் பார்த்து முருகன்,"அவர் என் தந்தையின் மாமாவின் மகன்" எனக் கூறினார்.எனில்,அவர் முருகனுக்கு என்ன உறவு?

1) சித்தப்பா/பெரியப்பா
2) சகோதரன்
3) மருமகன்
4) உடன் பிறவா சகோதரன்

வழிமுறை (வினா எண்: 9-10)
A x B என்பது A என்பவர் B-ன் தாய்.
A / B என்பது A என்பவர் B-ன் சகோதரி.
A + B என்பது A என்பவர் B-ன் மகன்.
A - B என்பது A என்பவர் B-ன் தந்தை.

9. கீழ்கண்ட எது P என்பவர் Q-ன் பாட்டி என்பதைக் குறிக்கும்?

1) P + Q - R
2) Q x R / P
3) P - R / Q
4) P x R x Q

10. கீழ்க்கண்ட எது P என்பவர் R-ன் சகோதரர் என்பதைக் குறிக்கும்?

1) R + Q / P
2) P + R - P
3) P - Q - R
4) R / P- Q

11. M என்பவர்N –ன் சகோதரர் .B என்பவர் N–ன் சகோதரர் M என்பவர் D–ன்சகோதரர்.எனில், கீழ்கண்டவைகளில் உறுதியானதாக அமையும் உறவு எது?

1) N என்பவர் B–ன் சகோதரர்.
2) N என்பவர் D–ன் சகோதரர்.
3) M என்பவர் B–ன் சகோதரர்.
4) D என்பவர் M–ன் சகோதரர்.

12. A என்பவர்B –ன் சகோதரி .C என்பவர் B –ன் சகோதரர் எனில்

1) A என்பவர் எப்போதும்C–ன் சகோதரர்.
2) C என்பவர் எப்போதும் A–ன் சகோதரர்.
3) B என்பவர் எப்போதும் A–ன் சகோதரர்.
4) B என்பவர் எப்போதும் A–ன் சகோதரி.

13. Q என்பவர்P –ன் கணவர் .Q என்பவர் C–ன் தந்தை. S என்பவர் P–ன் மகன்.எனில் S-க்கு C என்ன உறவு?

1) மாமனார்
2) உறுதியாக கூற இயலாது
3) சகோதரர்
4) சகோதரி

14.சுரேஷ் ஒரு சிறுவனைக் காட்டி,அவன் என் தந்தையின் மனைவியின் ஒரே மகனின் மகன் எனக் கூறினார்.சுரேஷிற்கு அச்சிறுவனிடம் உள்ள உறவு யாது?

1) தாத்தா
2) மாமா
3) தந்தை
4) கொள்ளுத்தாத்தா

15. x - என்பவர் Y -ஐ அறிமுகம் செய்யும் போது,அவர் என்னுடைய , தந்தையின் தந்தையினுடைய பேத்தியின் கணவர் எனக் கூறினார்.எனில் x-ற்கு Y என்ன உறவு?

1) சகோதரன் 2) மகன்
3) மைத்துனன் 3) மருமகன்

16. A+B என்பது A என்பவர் B சகோதரர்,
A- B என்பது A என்பவர் B சகோதரி,
A x B என்பது A என்பவர் B தந்தை,
A / B என்பது A என்பவர் B தாய்,எனில் கீழ்கண்டவற்றில் எது'F' என்பவர் W-ன் தந்தை என குறிப்பிடுவதாக அமையும்?

1) F / R +W
2) F+ R X W
3) F X R -W
4) FX R / W

17.F-ன் மகன் E,D-ன் மகன் ஆவார். P என்பவர் R-ன் மகள் ஆவார். N என்பவர் P-ன் சகோதரி மற்றும் E-ன் மகள் ஆவார்.எனில் E- க்கு R உடன் உள்ள உறவு யாது?

1) சகோதரன் 2) தந்தை
3) கணவர் 4) மாமா

18.ஒரு பெண் குழந்தையைப்பார்த்து ராம்,இவள் என்னுடைய தந்தையின் ஒரே குழந்தையின் மகள் ஆவார்" எனக் குறிப்பிடுகிறார்.அவ்வாறெனில், ராமனின் மனைவியை அந்தப் பெண் குழந்தை எவ்வாறு அழைக்கும்?

1) மகள்

2) அம்மா

3) பேத்தி

4) பாட்டி

19.ஒரு பையனைப் பார்த்து கண்ணன், இவன் என் தாயின் ஒரே மகளின் மகன் என்று கூறுகின்றார். அவ்வாறெனில் கண்ணன், அந்த பையனுக்கு என்ன உறவு?

1) மகன்

2) பேரன்

3) பாட்டன்

4) தந்தை

20.சினேகா புகைப்படத்தில் உள்ள நபரைக்காட்டி, "He is the father of my sister's brother" எனக் கூறினாள். எனில், அந்த நபர், சினேகாவிற்கு என்ன உறவு?

1) தாய் 2) தந்தை

3) தாய்மாமன் 4) இவற்றில் எதுவுமில்லை